# இந்து சாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey.
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூச] யாழ்ப்பாணம்:- நந்தன ஞூ ஐப்பசி மீ உகூஉ வெள்ளிக்கிழமை (14 Nov. 1952) [இல - ருகூ]


# உள்ளத்தின் தன்மையும் கல்வி முறையும்

## உற்று நோக்கி ஒழுங்குபெற அமைக்க வேண்டும்

உலகில் உயர்ந்தோர்கள் தங்கள் தொழிலை பொட்டிய அறிவு முழுவதையும் அடைய விரும்புகின்றனர். ஆகவே நம்நாட்டு ஆசிரியர்கள் கற்பிக்கு முறைகளை நன்கறிய விரும்புவது வியப்பன்று. கல்வியென்பது மனப்பழக்கமென்பர். ஆதலால் மனத்தின்றன்மையை ஆசிரியர்கள் அறிவது அமைந்த செயலாம். உள்ளத்தின் றன்மையைக் கல்விமுறைக் கிணங்க ஆராய்வதே இவ்வுரையின் நோக்கமாகும்.

**மன இயல்பு**

மனமென்பது யாது? அஃது எவ்வாறு கற்கின்றது? இவ்வினாக்களுக்கு விடை பெறுவதே நம நோக்கம் என்றுமன்று. மனத்தை ஐம்பொறிகளால் அளந்தறிய வொண்ணாது. மனத்தை மனத்தால் உய்த்துணரவேண்டும். உய்த்துணர இயலாதவர்கள் ஆன்றோர் மொழிகளைக் கேட்டுத் தெளிதல்வேண்டும்.

நம் நாட்டுப் பெரியோர்கள் மனமானது அணுவென்றும் எப்பொழுதும் சலிப்பதென்றும், விரைவான போக்குடையதென்றும் கூறுவர். மேனாட்டு அறிஞர்கள் இவற்றை ஒப்புக் கொள்வதுடன் புதிய கருவிகள் பலகொண்டு மனத்தை ஆராய்ந்து அறிவை வளர்த்திருக்கின்றனர். மேனாட்டு முறைப்படி மனத்தின் தன்மையை விரிப்பதே ஈண்டுக் கொள்ளப்படும்.

விழிப்பிலுங் கனவிலும் மனமானது வேலை செய்துகொண்டிருக்கின்றது. நினைப்பெனனும் அவ்வேலையானது அலைகளுடன் கூடிய ஆற்றோட்டத்தை ஒத்திருக்கின்றது. அறிவு, உணர்ச்சி, துணிபு ஆகிய அலைகள் எழுந்து விழுகின்றன. அவ்வறிவு, அவ் அவ்வுணர்ச்சி, அத் துணிபு ஆகியவற்றின் கலப்பால் ஏற்படுவதே நினைப்பெனப்படும்.

அம்மூன்றும் ஒன்று கூடிய காலத்தும ஒன்று மேம்பட்டும் மற்றவை தாழ்ந்துமே நிற்கும். அறிவு மேம்படும் பொழுது உணர்ச்சியுந் துணிவுந் தாழும். மற்றவற்றிற்கும் அவ்வாறே கொள்க. நினைப்பின் நடுவில் அறிவு நின்றால் அதன் விளிம்பில் மற்ற இரண்டும் தாழ்ந்து கிடக்கும். நடுவிலுள்ள பொருளைக் கொண்டே அறிவு நிலை, உணர்ச்சி நிலை, துணிவுநிலை என மனத்தின் நிலைகளுக்குப் பெயர் ஏற்படுகின்றன.

மனம் வேலை செய்யும் பொழுது இந்நிலைகள் அடிக்கடி மாறுகின்றன. நான் இதனை எழுதும்போது மணமொன்று வீசுகின்றது. அது மல்லிகை மணமென்று அறிகிறேன். சற்று இன்ப உணர்ச்சியில் ஆழ்கிறேன். முடிவில சில பூக்கள் கொய்யத் துணிகின்றேன். இவ்வாறே மனநிலைகள் எல்லாம் உண்டாகின்றன.

**அறிவு, உணர்ச்சி, துணிபு இயல்புகள்**

அறிவுநிலை சிறந்ததா? உணர்ச்சிநிலை சிறந்தா? துணிவுநிலை சிறந்ததா?

உனனை அறி, உலகை அறி; என்று அறிவைப் பெருமைப்படுத்துவோரும், பேரின்பத்தில் மூழ்கு; என்று உணர்ச்சியை உயர்த்துவோரும், "தீதொழிய நன்மை செயல்" என்று துணிவாலேற்படும் செயலைச் சிறப்பிப்போருமாக முத்திறத்தினர் உளர். இக்காலத்திலோ உணர்ச்சியை ஒழுங்குபடுத்தி அறிவை வளர்த்து நற்செயல்கள் மூலமாகச் சடப்பொருளை வெல்வதே வாழ்க்கைப் பயனெனக் கருதப்படுகிறது. கற்பதெல்லாம் ஒழுக்கம் செம்மைப்படுவதற்கெனபதை ஆசிரியர்கள் ஒருபோதும் மறக்கலாகாது. முயற்சியால் வளர்கிறோம்: அயர்ச்சியால் சுருங்குகின்றோம். பிறவியாகிய கடலை நீந்துவதற்கே உணர்ச்சிப்பொறிகளும் செயற்கைப் பொறிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. பூமி கர்மத்தின்பொருட்டானதென்று கேளவிப்பட்டதில்லையா? அன்றியும் மனத்தின் வேலை மூளையின் வேலையைச் சார்ந்திருக்கின்றது. உணர்ச்சிப்பொறிகள் வாயிலாகச் செல்லும் நாம்போட்டங்கள் தசைநார்களைத் தூண்டித் திருப்புகின்றன. மூளை செயலின் பொருட்டு அமைந்திருக்கின்றது. மனமும் செயலுக்காக ஏற்பட்டதென்று ஏன் கூறலாகாது? எத்தகைய நினைப்பும் முடிவில் செலவாகவே மாறும்.

ஆசிரியர்களே! உங்கள் மாணவர்களுடைய உடலும் உள்ளமும் ஒழுக்கத்திற்காக உண்டாயினவென்பதை நன்கு மதியுங்கள். கல்வியென்பது ஒழுக்கத்திற்காகப் பழக்குவதேயாம். செய்யத்தகாதவற்றைத் தவிர்த்து [illegible] வேண்டியவற்றை விடாது உரிய காலத்தில் சரிவரச் செய்வதே ஒழுக்கமெனப்படும், இதில் பழகுவதே மாணவர்களுடைய உரிமையும் கடமையுமாம்.

**ஒழுக்கமும் செயலும் தருவது கல்வி**

கற்றவன் வாழ்க்கைக்குரிய எச்செயல்களையும் நன்றாய்ச் செய்து முடிக்கிறான்; கல்லாதவன் சிறு செயலையும் செய்யமாட்டாது திகைக்கிறான். உலக வாழ்க்கையில ஒழுக்கான செயல்களைச் செய்துகொண்டு வாழ்பவனே கல்விமான. எத்துறையில் ஒருவனுக்கு ஒழுக்கமாவது செயலாவது குன்றுகின்றதோ அத்துறையில் அவனைக் கல்லாதவன் என்றே கூறல் வேண்டும். செயலின்றிக் கல்வியில்லை செயலின்றி அறிவில்லை. கேட்ட பாடங்களைத் திரும்பக் கூறல் வேண்டும். அல்லது வேறு வழியில் பயன்படுத்தல் வேண்டும். இல்லாவிடில் அப் பாடங்கள் மனதில் நில்லா. இக் காலத்தில் மாணவர்கள் குறிப்பெழுதுவதும், சித்திரம் வரைவதும் தேசப்படங்கள் தீட்டுவதும், அளவெடுப்பதும் அகராதிபார்ப்பதும், உரைகள் எழுதுவதும், தொழிற்சாலைகளில் சோதனைகள் செய்வதுமாக நல்ல முறைகளில் கற்கின்றனர். பொருளைத் தெளியாமலே பேசிவிடலாம். பிறர் மொழிகளை ஒப்பித்துத் தன்னறியாமையை மறைத்துவிடலாம். ஒன்றைச் செய்வதென்றால் சரியாகச் செய்தல் வேண்டும்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## கோத்தும்பீ! தாயான ஈசற்கே சென்றூதாய்

திருச்சிற்றம்பலம்.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப்பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீபேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருச்சிற்றம்பலம்.

# வாழ்வுப்போராட்டத்தில் மடியும் மனிதனே!

## வழியுண்டு சைவநீதி விளங்குமேல்

அன்றொரு நாள் பிரயாணத்தில் நண்பரொருவர் திரு த. கைலாயபிள்ளையவர்கள் எழுதிய நாவலர் சரித்திரத்தைப் படித்துக் கொண்டிருந்தார்.

**************************

"ஆறுமுகன் வழித் தோன்றல்"

**************************

"சிதம்பரம் வித்தியாசாலை" என்ற விஞ்ஞாபனத்தை (சௌத்திரிஷு வைகாசி மீ உசங வ) க் குறிப்பிட்டுச் "சமயநூலுணர்ச்சியை வளர்த்தலாகிய இந்தத் தருமமே எல்லாத் தருமங்களிலும் மிக மேலானது" என்றெழுதிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுக்குக் குருபூசை செய்துவிட்டுக் கடமை முடிந்தது! என்று கைகட்டிக்கொண்டு இருந்துவிடுகிறோம். எம்மூரில் நாவலர் பரம்பரையினர் என ஞான உறவு கொண்டாடும் சீடர் கூட்டம் என்ன செய்கின்றது? என்றார். 'சமயப் பற்று இருத்தல் ஆன்ம ஈடேற்றத்துக்குத் தடையன்றோ ஆகவே அப் பொன் விலங்கும் வேண்டாம் என நிருக்கின்றனர் போலும்' என்றேன். இது செய்யும் கருமம் சரியென நிலைநாட்டும் முயற்சியே என்றது என்மனம். ஆனால் இன்று இக் கேள்வி என்னை எதிர்த்து நிற்கின்றது. சைவன் ஒவ்வொருவனையும — ஏன் தமிழன் ஒவ்வொருவனையும் முன நின்று எதிர்க்கின்றது! மனித குலத்தையே கேட்கிறது எனலாம்.

வாழ்வு என்றால் அது பலவகைப்படும் என நம்பப்படுகிறது. சமயவாழ்வு, சமூகவாழ்வு, அரசியல்வாழ்வு, பொருளாதார வாழ்வு என்றும், அகவாழ்வு, புறவாழ்வு என்றும், பலவகையாகப் பாகுபடுத்தியுள்ளனர் நவயுகச் சிந்தனையாளர். வாழ்வெனனும் நாடக மேடையில் இவை ஒவ்வொன்றும் நடிகனைப் பல வகை வேடத்தில் நடிக்கச் செய்கின்றது. அவன் நிமிடம் ஒரு நடிசனாக, நாளுக்கு ஒரு ஆடையில் தன சுய உருவை மறைத்து நடிக்கிறான். முடிவில் தன்னையே ஒரு வேடம் எனக் கருதிவிடுகிறான்.

நானார்? என்ற விசாரம் சூனியத்திக்கு இட்டுச் செல்கிறது இன்றைய மனிதனை. இந்த நிமிடம் மாணவன்; அடுத்த நிமிடம் பக்தன்; மறு நிமிடம் தமிழன்பன்; அப்பால் ஆங்கிலப் பிரியன்; மறுமுறை விஞ்ஞான விற்பன்னன்; அரசியல்வாதி ஒரு முறை; ஆத்மீகவாதி மறு முறை. இப்படியே ஒன்றைவிட்டொன்றுபற்றி, ஒன்றுக்கொன்று வாழ்க்கையிற்றொடர்பில்லை எனக்காட்டி, வாழ்வு என்ற மணிமாலையைக் கோத்துச் செல்லும் கயிறு வேண்டியதில்லை என

தொடர்ச்சி 3-ம் பக்கம்

அரசியல் அ[illegible]

# தென்னாபிரிக்க இந்தியப் போராட்ட எதிரொலியா?

## இலங்கையராகும் உரிமை இன்னமும் கடினமாகின்றதா?

பாராளுமன்ற மக்கள் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் பிரதமர் டட்லி சேனநாயக இந்திய பாகிஸ்தான் பிரசா உரிமைத் திருத்தச் சட்டமொன்றைக் கொணர்ந்தபொழுது இலங்கை அரசாங்கம் இந்தியர்களில் அநுதாபங் காட்டுகின்றதென முதலைக் கண்ணீர் விடுத்தார்.

பொதுவுடைமைக் கட்சியினர் திரு. பீட்டர் கெனமன் இலங்கை அரசாங்கம் தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் அடிச்சுவட்டைப்பின்பற்றுகின்றதா என்று ஆச்சரியப்பட்டார். நிறத்திமிர் கொண்ட மலான் பிரதமரின் மறக்கொள்கை இங்கேயும் பரவுகின்றதா என்று ஆச்சரியப்பட்டார்.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் இலங்கைப் பிரதமர் தந்தையின் வாக்குறுதிகளைப் பொருட்படுத்தாதுவிட்ட குற்றத்தினைபாற்பட்டது மல்லாது [illegible] மையைச் செய்வதாகக் கூறுகின்ற தன் [illegible] எடுத்துக் காட்டினார். ஆங்கிலேயநாட்டு மந்திரி சபையின் நீதிக்குழுவினர் அளித்த தீர்ப்பை விலகி நடக்க இலங்கை அரசாங்கம் முயல்வது சனநாயகமுறைக்காகாதென்றும் உரைத்தார்.

இந்தியப் பிரதிநிதி திரு. S. P. வைத்தியலிங்கம் உள்ளத்தில் உண்மை இப்போதுதான் புலப்பட்டார் போன்று இனி ஒரு கணமும் அரசாங்கக் கட்சியில் அமரமுடியாதெனக்கூறி இத்தத் திட்டத்தை எதிர்த்தார். உலக்கை தேய்ந்து விட்டதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழக அந்தணர்வானவர் ஆனினம்
வீழக தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ ஐப்பசிமீ
உகஉ வெள்ளிக்கிழமை

## ஏன் இந்த வேகம்?

ஆய்ந்து ஓர்ந்து எக்கருமத்தையுஞ் செய்வதே அறிவுடையாரின் பண்பு. அன்னர் துணிந்த பின்பு எண்ணுர்; எண்ணியே துணிவர். எங்கள் நாட்டின் பரிபாலனப் பொறுப்பை ஏற்றிருக்கின்றவர்கள் இவ்வாறு ஆய்ந்து நோக்கும் மனப்பான்மை உள்ளவர்களா என்று ஆராய வேண்டியிருக்கின்றது. சில நாட்களுக்கு முன் சீனுவுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொண்ட வர்த்தக ஒழுங்குகளை 'உற்றுப் பார்க்கும பொழுது எண்ணித் துணியும் இயற்கை இப்போதைய இலங்கை அரசாங்கத்துக்கில்லையென்றே சொல்ல வேண்டும். அரசியல் நெருக்கடி எங்கே வந்துவிடுமோ என்ற பரபரப்பிருந்த ஈற்றில் ஏதோ நற்புத்தி நிலவியதின் பயனாக நிலைமை சீர்கெடாவண்ணம் காப்பாற்றப்பட்டமை நேயர்கள் அறிந்ததே. இந்த நெருக்கடி தீர்ந்துவிட்டதே என்று ஆறுதல் அடைய முன்னரே 'பழைய குருடி கதவைத் திற' என்ருங்கு இலங்கைவாழ் இந்தியர்கள் இந்நாட்டிற் குரியவர்களாகும் சட்டம் திரும்பவும் திருத்தி யமைக்கப்பட வேண்டும் என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக மக்கள் பிரதிநிதிகள் சபையைக் கேட்டிருக்கின்ருர். இச்சட்டம் எவ்வாற்ருனும் இலங்கை வாழ் இந்தியர்களுக்கோ அல்லது இந்திய அரசாங்கத்துக்கோ மன அமைதியைக் கொடுக்க மாட்டாதென்பது ஒரு பகுதியாரின் அபிப்பிராயம். இலங்கையர்களின் நலனுக்கு இது மிகவும் வேண்டப்படுவதொன்றென்பது இன்னொரு பகுதியாரின் அபிப்பிராயம். பொதுநல விருப்புடையவர்களும் இவ்விரு நாட்டினர்க்கிடையே நல்லெண்ணம் வளர வேண்டுமென்ற கொள்கையுடையவர்களும் நடுநின்று இருதிறத்தினரையும் ஒருமுகப்படச் செய்வதை நாடினர். அங்ஙனமே நாமும் பல முறையும் ஆலோசனை கூறியிருக்கின்ருேம்.

ஆனல் அதிவேகமே மயமாகிய இந்தக் காலத்தில் இலங்கை அரசாங்கமும் ஆராய்ந்து பார்க்க எண்ணவில்லை. ஆங்கிலேயநாட்டு மந்திரசபையின் நீதிக்குழுவினரின் தீர்ப்பு இந்தியர்களுக்கு இலங்கையராகும் உரிமையை இலேசாகக் கொடுத்து விடுமே என்று உள்ளத்திலே தடுமாறி, இருக்கும் சட்டத்தை இன்னமும் பொருததமில்லாமற் செய்யும் நோக்கமாக, ஒரு திருத்தம் கொண்டுவந்தமை இதுவரையும் இலங்கை அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கம் அளவளாவி ஆராய்ந்து மனவேற்றுமை உண்டுபண்ணும் சட்டங்களை மாற்றி அமைக்கலாமென்று வழிபார்த்திருந்த பிரதமர் திரு நேரு அவர்களுக்கும் திகைப்பை ஆக்கிவிட்டதென்ருல் யார்தான் பரபரப்படையார்? திரு. நேரு அவர்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் இதைப் பற்றி இந்திய பாராளுமன்ற மக்கள் சபையில் எடுத்துக் காட்டி மிகவும் பாரதூரமான பெறுபேற்றை விளைவிக்கக் கூடிய இந்தச் சட்டத் திருத்தம் பற்றி இலங்கை அரசாங்கம் மின்னல் வேகமாக ஒரு முடிவு செய்யாது ஆய்ந்து பார்ப்பார்கள் என்றுதான் எண்ணுவதாகவும் சொல்லியிருக்கின்ருர்.

இலங்கை அரசாங்கம் பெருந்தன்மையாகநடக்கப் போகின்றதா இல்லையா என்பதுதான் இப்போதைய கேள்வி. நல்லெண்ணம் நிலவும் என்றும் இன்னமும் நாம் எதிர்பார்க்கின்ருேம்.

## சோமவார விரதமும் அமாவாசையும்

பண்டிதர் ம. வே. தி. அவர்கள் எழுதியது

அமாவாசையும் திங்கட்கிழமையும் ஒருங்கு நிகழ்தலால் அது சோமவார சிவராத்திரி எனவும், யோக சிவராத்திரி எனவும் சொல்லப்படும். கார்த்திகை மாசத் திங்கட்கிழமையில் அமாவாசை நிகழுமாயின் மிக விசேடமாம். வருகிற திங்கட்கிழமை (17-11-52) இவ்வாறு நிகழுகின்றது. அத்தினத்தில் அமாவாசை விரதமும் சோமவார விரதமும் அநுட்டிப்போர், அன்று மத்தியானத்துக்குப் பிந்தாமல் ஸ்நானம் சந்தியாவந்தனம், தர்ப்பணம் முதலியவற்றை முடித்துக்கொண்டு அமாவாசை விரதத்தை உத்தேசித்து அன்னம் கறி முதலியவற்றை நிவேதித்து அவற்றை ஒருமுறை கையிலெடுத்து முகந்து விட்டு உண்ணுதொழிக. சோமவாரத்தை உபவாசமாக அநுட்டிப்போர் பிற்பகலிலும் ஸ்நானம் முதலியன முடித்த, சுவாமி தரிசனஞ் செய்து அடுத்தநாட்காலை புண்ணிய தீர்த்தத்தில்மூழ்கி பாரணஞ் செய்க. ஒருவேளை உண்போர் அன்று சூரியன் அஸ்தமிக்கு முன் உண்க.

# ஆணவம் நீக்கித் தூய்மை பெறுமின்

## ஸ்ரீ சுத்தானந்த யோகிகளின் தூய மதி மொழி

### மட்டக்கிளப்பு

மட்டக்கிளப்பு சிவானந்த வித்தியாலயத்தில் சுவாமிகள் பேசும்பொழுது கிழக்கு நாடுகள் தத்துவ ஞானத்திலும் மேற்கு நாடுகள் விஞ்ஞானத்திலும் முன்னேற்றமடைந்திருக்கின்றன. இவை இரண்டும் இணைந்து இயங்குமானுல் இவ்வுலகம் சுவர்க்கமாக மாறிவிடும். இவை இரண்டையும் இணைத்து ஒன்றுக்குவதே எனது நோக்கம். இதற்காகவே இருபத்தைந்து வருட மௌனத்தை நீத்தேன்.

ஜப்பானிய மக்கள் மேற்கு நாட்டு விஞ்ஞானத்தையும் கிழக்கு நாட்டுப் பௌத்த தர்மத்தையும் தங்கள் வாழ்க்கையில் இணைத்து விட்டார்கள். ஜப்பான் ஒரு சிறந்த நாடாக முன்னேறுதற்கு இதுவே காரணம். ஜப்பானியர் செயல் வீராய்த் திகழுகின்றனர். ஆலயங்களிலே பணஞ் சேர்த்துக் கல்வி அபிவிருத்தி செய்கின்றனர். எல்லாக் கல்லூரிகளிலும் தொழிற்கல்வியூட்டுகின்றனர். இதன் பெறுபேருகத் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையுந் தாங்களே ஆக்குகின்ருர்கள் என்று எடுத்துக்காட்டாய் விளக்கிக் கூறினர்.

### கல்முனை

கல்முனை இராமகிருஷ்ணசங்கப் பாடசாலையிற் பேசும்போது இறைவன் ஒருவனே உளன். இவ்வுடல் மாயையால் ஆயது. காண்டல் கேட்டல் முதலிய எல்லாச் செயல்களிலும் இறைவன் திருவருள் இருக்கின்றது. இவற்றை ஒவ்வொருவரும் உணர்ந்து மேகமானது சமுத்திரத்திலிருந்து தண்ணீரை எடுத்து மக்களுக்கு மழையாய்க் கொடுப்பது போல ஒவ்வொருவரும் முயன்று மற்றவர்களுக்கு உதவ வேண்டும். இரும்பு போன்ற உடலும் இரக்கமுள்ள உள்ளமும் உடையராய்ச் சுறுசுறுப்பான அயராமுயற்சி உடையராய் வாழவேண்டும். கள்ளமற்ற உள்ளமும் கலக்கமற்ற சிந்தையும் விளங்க வேண்டும். இவ்வழி ஒழுகினுல் ஓர் புதிய இன்ப வாழ்வை எய்துவோம் என்று கூறினர்.

### காரைதீவு

மட்டக்களப்புக் காரைதீவில் சுவாமிகள் பேசும்பொழுது நீங்கள் விபுலானந்த சங்கம் எனப் பெயரிய ஒரு சங்கத்தை யமைத்து அதன் மூலம் சமூகத் தொண்டர்களை உருவாக்கி யுதவவேண்டும், தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கக் கூடியவர்களை நீங்கள் ஆக்கல் வேண்டும். இலங்கையிலே பொதுநலம் புரிவதில் பலர் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் தம் நாட்டுக்குத் தொண்டு புரிய வேண்டும் என்று கூறினர்.

### சம்மாந்துறை

சம்மாந்துறையிற் பேசும் பொழுது கடவுள் ஒருவரே அவர் எங்குமிருக்கிருர். ஒன்றே மக்கட் குலம். சாதிமத பேதம் நீக்க வேண்டும். ஆலயங்களிலே பலியிடும் பழக்கத்தை ஒழித்து செபம் தியானம் திருத்தொண்டு ஆகியவற்ருல் இறைவனை வழிபட்டு அருள்பெற முயல வேண்டும் என்று கூறினர்.

### மட்டக்கிளப்பு

மட்டக்களப்பிற்பேசும்பொழுது அணுக்குண்டுக்குப் பதிலாய் நாம் ஆத்மஞானக் குண்டை எடுத்தாள வேண்டும், இது சந்தேகமில்லாச் சாதனை. இப்பொழுது கடவுள் பக்தி குன்றி மக்களின் மதி கீழான துறைகளை நோக்கிச் செல்லுகின்றது. கடவுள் ஒரு பெருஞ் சக்தி. அதை அடைய நாம் முயல வேண்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## சோமவாரவிரதமான்மியம்

தோத்திரப் பாக்களுடன்

பண்டிதர்
ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை
அவர்கள் எழுதியது

பெறுமிடம்

யாழ்ப்பாணம்
சைவப்பிரகாச யந்திரசாலை

விலை சதம் 30

# உங்கள் நக்ஷத்திரம்?

## எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள் 16—11—52——22—11—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்தவாரம் மனநிலையும் உடல்நிலையும் உம்மைத் தலைகீழாக்கும வரவுசெலவு சமாளிக்கமுடியாமலிருக்கும். குடும்பச் சலனைகளுக்கும் உத்தியோகத் தொந்தரவுகளுக்குமிடமுண்டு. திங்கள் மாலை செவ்வாய் புதன்கவனமாய்க்கழிக்க வேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இந்தவாரம் தகுதி வாய்ந்த எதிலும் சித்தி பெய்த முடியாது. கதிக எதிர்ப்பும் புறங்கூறலுமிருக்கும். அவமானங்களைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். புதன் இரவு வியாழன் வெள்ளி கவனமாய்க் கழிக்கவேண்டும். வார இறுதி திருப்பவும் நன்று.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்த வாரம் உம்முடைய விஷயங்களிற் பல திருத்தங்களைக் காணலாம். போட்டியிடுவோரை வெல்லுதலும் குடும்பசமாதானமும் நிச்சயம் உத்தியோகத் தொந்தரவுகளும் நீங்கி உமது திறமை உமது மேலதிகாரியாற் கவனிக்கப்படும் முயற்சிகளை முன்னேற்றுக. வாரத்தின் கடைசிநாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

இந்தவாரம் ... விசேடமாய்க் கவனிக்கப்பட வேண்டும். பணநிலை திருந்தும். வியாபாரத்தில் புதுத்துறை கைகூடும். குடும்பத் தொந்தரவுகள் சிக்கலாகவே யிருக்கும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.

ஒருவிசேட கருமத்தில் இந்த வாரம சமாதானம் செய்வதிற் கஷ்டமிருக்கும். போதிய பணம் வரும். ஆனுல் விரைவிற் செலவழியும். வாரஇறுதியிற் பிறநாடுகளிலிருந்து நல்ல புதினம்வரும்.

**கன்னிராசி** உத்திரம 2,3,4ம பாதம் அத்தம் சித்திரை 1, 2ம பாதம.

இந்தவாரம் நெடுங்காலத்தின் பின் சில விஷயங்கள் அச்சமில்லாமல் உடன்படுத்தக்கூடியதாயிருக்கும். எதிர்ப்பு சகன்றுவிட வனையோரை இலகுவாய்இயைந்து வரச்செய்யலாம் வாரஇறுதியில் பெண்ணின நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**துலாம்** சித்திரை 3,4ம்பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

இந்தவாரத் தொடக்கம் தேகசுகம் திருந்தவேண்டும், புதுமுயற்சிகளிற் சித்தியும் நிச்சயம். குடும்ப சமாதானத்துடன் போட்டியிடுவோரை வெல்லுதற்கு மிடமுண்டு.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

தேகசுகத்தைப்பற்றி விசேஷ கவனம் செலுத்தவேண்டும். சிறு உத்தியோகத் தொந்தரவுகளுக்கும குடும்பச் சலனங்களுக்கு மிடமுண்டு. எல்லை கடந்து நண்பருக்கு உதவி செய்யப்போனுல் கஷ்டங்களுக்குள்ளாவீர். வார இறுதியிற் சில தனலாபமுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

உம்முடையவிஷயங்களில் அதிக கஷ்டமின்றிச் சித்தியெய்தக்கூடியதாயிருக்கும். செலவதிகரிக்கும். ஆனுல் சமாளிக்கவேண்டிய அளவு பணம் வரும், வார நடுவில் சிறு உத்தியோகத் தொந்தரவுகளுக்கிடமுண்டு.

**மகரராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

கருமங்களில் உடன்படச்செய்வதில் இந்தவாரம் அதிககஷ்டமிருக்கும். நண்பருடன் பிழைவிளக்கமும் இரகசியப் பகைவரால்தொந்தரவுகளும் உண்டாகக்கூடும். அபாயங்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

பணவிஷயங்கள் குடும்பவிஷயங்களில் திருத்தம் நிச்சயம். போட்டியிடுவோரை வெல்லுதலுங்கூடும். முயற்சிகளை முன்னேற்றுக.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

வாரத்தின் முதல் இரு நாட்களும் சிறிதுதொந்தரவாயிருக்கும், ஆனுல் பின்பு திருத்தம் நிச்சயம், எல்லாமுயற்சியிலும் சித்திநிச்சயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணவம் நீக்கித் தூய்மை பெறுமின்!

—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாம்பக்கத் தொடர்ச்சி இம். இதற்குத் தியானமும் யோக சாதனமுமே சிறந்த வழிகள்.

சைவ சித்தாந்தத்தின் சிறப்பை நாம் மறந்து விட்டோம். உலகிலுள்ள மதங்களின் பொருள்களேல்லாம் அதில் அமைந்துள்ளன நித்திய வாழ்க்கையில் சமய அநுட்டானஞ் செய்யத் தவறிவிட்டோம். எம் சமய உண்மைகளைப் பரப்ப நல்ல துறவிகள் தேவை.

அகன்ற இந்த ஆகாய வெளியிலே இம் மண்ணுலகு அற்பமானது. நாம் அதனிலும் பன் மடங்கு அற்பமானவர்களா யிருக்கிறோம். இவ்வுண்மையை உணர்ந்து ஆணவத்தை நீக்கி அப்பர் மாணிக்கவாசகர் போல் தூய்மை பெற்று அன்பினால் உலகிலுள்ளோர் யாவரையும் வெல்லுவோமாக என்று அறிவுரைகள் வாரி வழங்கினர்.

### அக்கரைப்பற்று

அக்கரைப்பற்றிலே பேசும்பொழுது நாற்பது ஆண்டுகளாக நான் புரிந்த தவத்தின் பலனை இன்று கண்டேன்! என் கனவுகளெல்லாம் திருவருளின் வழி நிறைவேறும் காலம் இது. அக்கரையில் பற்றன்ன இந்த அக்கரைப்பற்றிலேயே அதைப்பற்றிக் கூறும்படி திருவருள் ஆணை உந்துகின்றது.

இங்கே அமைதியான இடத்தில் ஒரு சுத்தமான நிலயத்தைத் தெரிந்து அதில் விவசாயம், நூல்நூற்றல், இலக்கியம், யோகசாதனம், சமயதத்துவங்கள் முதலியன போதிக்கப்படுதல் பத்திரிகைகள் புத்தகங்கள் வெளியிடுதல் முதலியன செய்தல் வேண்டும். சாதனையாளர்களுக்கு வசிக்கத் தனிக் குடிசைகளும், ஒழுக்கத் திட்டங்களும் அமைக்கப்பெறும். இங்கே பயின்றவர்கள் உலகின் பல பாகங்களுக்கும் சென்று எம் கொள்கைகளைப் பரப்புவர். இதற்கு 50 தீர வாலிபர்கள் தேவைஎன்றுகூறினர்.

## விளம்பரம்

மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் வெள்ளி விழா ஞாபகார்த்தச் சங்கம்.

இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் இரு காணிகளையும் அறுதியாகக் கொள்ள விரும்புவோர்களிடமிருந்து அடைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன

கேள்விப் பத்திரங்கள் 1952-ம் ஆண்டு மார்கழி மாதம் 10-ம் திகதி புதன்கிழமை நடுப்பகல். 12 மணிக்கோ அல்லது அதற்கு முன்பதாக "ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் ஞாபகார்த்தச் சங்க தனாதிகாரி- (G. A. N. P) கச்சேரி, யாழ்ப்பாணம்" என விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டும்.

ஆதனங்கள்:—

1. வடமாகாணம் யாழ்ப்பாணப் பகுதி உடுவில் கோவில்பற்று இணுவில் இறை "செலம்பன்" - 36 பரப்பு - கிணறும் - எல்லை.

கிழக்கு - ஆறுமுகம் சின்னப்பிள்ளை கைம்பெண் சின்னத்தங்கத்தின் ஆதனம்

வடக்கு - மூகாந்திரம் S. K. சுவாமிநாதனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.

மேற்கு - புகையிரதப் பாதையும் பத்தர் கந்தர் பெண் சிதம்பரத்தின் ஆதனமும்

தெற்கு - புறூஸ் தம்பையாவின் ஆதனம இதடீகளும்,

2. வட மாகாணம் யாழ்ப்பாணப் பகுதி மானிப்பாயில் செம்மன் தோட்டம் பரப்பு 5. குளி 8. கல்லால் அமைக்கப்பட்ட வீடும், கிணறும், பசய்பயிர்களும், வான் பயிர்களும.

எல்லை - கிழக்கு கந்தையா செல்வநாயகத்தின் ஆதனம்,
வடக்கு ஒழுங்கை
மேற்கு ஒழுங்கையும் மூடிக்குரிய ஆதனமும்
தெற்கு செல்லப்பா கதிரவேலுவின் ஆதனம்.

இவ்வாதனத்தில் சொரியலாய் அரைவாசி (½) மேலே காட்டியிருக்கும் இரு ஆதனங்களின் உறுதி சம்பந்தமாகவேனும், வேறு எவ்வித விபரங்களுக்கும் உதவிக்காரியதரிசி திரு. க. கந்தசுவாமி - 290 நாவலர் ரோட்டு, யாழ்ப்பாணமென்ற விலாசத்திற்கு எழுதியேனும், நேரிலேனும் அறிந்து கொள்ளலாம்.

## கொக்குவில் கிராமச்சங் கேள்விப் பத்திரம்

கொக்குவில்கிராமச்சங்க சைவப் பாடசாலை ரோட்டு வேலையை ஒப்பந்தத்தில் கொடுக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள்:- மாதிரிக் கேள்விப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் இம்மாதம் 18-ந் தேதி வரையும் ரூபா 25 கட்டிப் பெற்றுக்கொள்க. இப்பத்திரங்கள் பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்தகாரருக்கு மாத்திரம் வழங்கப்படும்.

நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்கள் நன்ருக ஒட்டப்பெற்ற உறைகளில் இட்டு மேலும் தங்கள் முத்திரைகள் வைத்து 21-11-52 வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு முன்னதாக இச்சங்கத் தலைவருக்கு "கேள்விப்பத்திர" மென்றும் குறிப்பிட்டுப் பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இதுபற்றிய வேறு விபரங்கள் தேவைப்படுவோர் இவ்வலுவலகத்திற் பெற்றுக்கொள்க.

சி. அருளம்பலம்
தலைவர்
கொக்குவில் கிராமச்சங்கம்
கொக்குவில்
11-10-52
M 166 14

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம இந்து பெண்கள் கல்லூரிக்கும், ஆண்கள் கல்லூரிக்கும் கிட்ட வீட்டு நிலம் 17 பரப்பு வரையில் விலைபரப்பு ஒன்று நுபா 2000

விபரத்துக்கு
கீழ்க்காண்பவருக்கு எழுதவும்
T. நடராசா பிறக்டர்
31, பெறிவீதி கொழும்பு 12

கேள்விப் பத்திரங்களின் அங்கீகாரம் சங்க நிர்வாகிகளின் தீர்ப்பையே முடிவானதாகக் கொள்ளப்படும்.

முதலியார், C. கணபதிப்பிள்ளை
காரியதரிசி
ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் வெள்ளிவிழா ஞாபகார்த்தச் சங்கம்
யாழ்ப்பாணம்,
11-11-52.
M. 169 14, 21—11—52.

## வாழ்வுப் போராட்டத்தில் மடியும் மனிதனே!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிரூபித்து வாழ்கின்றனர். ஆகவே நிமிடந்தோறும் வாழ்வு என்பது ஓர் போராட்டமாகி வருகிறது கருத்துப் போராட்டம், செயற் போராட்டம், புறத்தே நிகழும் உலக மகா யுத்தங்களைச் சிறுவர் விளையாட்டாக்கும் மாபெரும் யுத்தங்கள் அக உலகில் நடைபெறுகின்றன. போரில உயிரிழக்கிறான் போர் வீரன்; உட்போரால் தன்னை இழக்கிறான் மனிதன்.

'இனி நாம் செய்ய வேண்டுவது யாது?' அன்று ரோல்ஸ்டோய் இவ் வினவுக்கு விடைகாண முயன்று ஓர் பொருளாதாரத் திட்டத்தை வெளியிட்டார் காந்தி அதைப் போற்றினர் இன்று இவ்வினு எமக்கு முன் பெரிய அரிவாட் குறி(?) யுடன் நிற்கிறது; "விடை காண்; இன்றேல் வெட்டுவேன்" என்கிறது. ஆம்! எம் வாழ்வு இவ் வினவுக்கு விடை காண்பதிலேயே தங்கியுள்ளது. நாம் வாழ்வதா! வீழ்வதா? விழிமின்! எழுமின்! போர்ப்பறைகொட்டுமின்! வெள்ளமாகவரும் வன்பகையை வீழ்த்திப் பின்வந்து அமைதியாக உறங்கலாம்.

மறுமலர்ச்சித் தென்றல் என்ற பெயரோடு நச்சுக்காற்று வீசுகின்றது; இம்முறை வடக்கேயிருந்து. மேற்கேயிருந்து வீசிய புயற்காற்று ஓய்ந்துவிட்டது; இப்போது அது வாடையுடன் கலந்தே வருகிறது. அம் மேல் காற்றுச் சுழல் தான் வாடையையும் பழுதாக்கிற்று. தற்கொலை செய்ய விரும்புபவன் வீட்டில் அடுப்பெரிக்கும் வாயுவை (Gas) த் திறந்து வைத்துவிட்டு இனிமை தரும் அதன் நுகர்ச்சியில் உயிரை இழப்பான். அந்தவழி சரியாகத் தெரிகின்றதோ, பெரியோர்களே? உங்கள் இளஞ் சந்ததிகள் இத் தற்கொலையில் முயன்றுள்ளனர். அவர்களைத் தவிர்த்து நன்னெறி உபதேசிப்பது நம் கடமையன்றோ?

கல்லூரிகளிற் பிள்ளைகளைப் படிப்பிக்கும் பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளின் பெட்டிகளை ஒரு முறை திறந்து பாருங்கள். மூடிமூடி வைத்தது போதும். இத் தீபாவலியின்போது யாழ்ப்பாணத்தில் திராவிடர் என்ரொரு இனத்தை முன்னேற்றமடையச் செய்யக் கங்கணங்கட்டி நிற்கின்ற கழகத்தினர் அச்சுக்கூடப் பெயர்கூடப் போடாமல் 'வீறுமிக்க தமிழில' "தீபாவளித் திருநாளா? திராவிடத்தின் இழி நாளா? வைதிக வம்பர்களின் வரட்டு வேதாந்தம்" என்று விளம்பரம் எழுதிவிட்டிருக்கின்றனர். (இது இரண்டாம் இலக்கப் பிரசார வெளியீடாம்) பட்டணம் பார்க்கச் சென்று கிராம மாணவர்கள் இதைக் கொண்டுவந்து வாசித்துத் திகிலடைந்து ஆசிரியரைக் கேட்கின்றனர்.

பாடசாலைகளின் கதை இதைவிடப் பெரிதும் மாறிவிடவில்லை. இலவசக் கல்வித்திட்டத்தால், 'ஆழ்கடலின் அடியில் கிடந்த முத்து'களெல்லாம் வெளிவந்து மின்னித் தெறிக்கின்றன. அவர்களுக்குத் தமிழ்க் கல்வியும் போதாது; ஆங்கிலக் கல்வியும் சூனியம். மறுமலர்ச்சித் தமிழே அவரறிந்த மொழி. அவர்கள் பட உலகில் கிளறப்பட்ட உணர்ச்சிகளுக்கு எங்கே தூபம் போடக்கிடைக்கும் எனத் தேடி மலிவாகக் கிடைக்கும் தீஞ்சுவைத் தனித் தமிழ் ஏடுகளைப் 15 சதம் முதல் 3 ரூபாவரை கொடுத்து வாங்கிப் படித்து இன்புறுகின்றனர். பெற்றோரும் இவர்களுக்கு அறிந்தோ அறியாமலோ உதவி செய்கின்றனர். அஞ்ஞான இருளை அடியோடு அகற்ற வேண்டாமா? வலியற்ற தேவர்கள் பரமனைப் பணிந்தது போலக் கவி வீழ்த்த வல்ல குமரனைப்பெற நோற்பீராக. ஞானதானம் செய்வீராக. ஆடம்பரப் பூசை திருவிழாக்களைக் குறைத்து அறிவுவளரச் சைவநெறியைப் பரப்ப முயல்வீராக.

அக்கரி லமர்ந்தங்க ணினது மேவி
யாழி புடை சூழ்ந் தொலிக்கு மீழந் தன்னினின்
மன்னு திருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப் போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்திற
றிருக் கேதீச்சரத் தண்ணல் செய்யபாத
முன்னிமிகப் பணிந்தேத்தி யன்பரோடு
முலவாத கிழி பெற்றுர் உவகை யுற்றுர்.

## குத்தகைக்கு நிலம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குச் சொந்தமானதும் நாயன்மார்கட்டு ஆசுபத்திரிக்கு அணித்தாயுள்ளதுமாகிய 22 பரப்புக்கொண்ட "வீரன்புலம்" என்னும காணியை 1952ம் ஆண்டு அக்டோபர் மாசம் முதலாந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுகக மனுப்பத்திரங்கள் ஏறகப்படும்.

ஆதனத்தைக் குத்தகைக்கு ஏற்பவர் ஒருவருடக குத்தகைப் பணத்தை உடனே கட்டவேண்டும்.

இந்துக்கல்லூரி அதிகாரசபைக்கு ஷை குத்தகையை அங்கீகரிக்கும் அல்லது புறக்கணிக்கும்உரித்து உண்டு. குத்தகையை அதிகார சபை அங்கீகரித்தால் ஏறபவர் தனகு செலவில் நொத்தாரிசு மூலம் குத்தகை உறுதி முடிப்பிக்க வேண்டும்.

நவம்பர் மாசம் 17-ந் திகதிக்கு முன் மனுப்பத்திரங்கள் அனுப்ப வேண்டும்,

அ. அருளம்பலம்
கௌரவ காரியதரிசி
யா. இ. க. ஆ. சபை
யாழ்ப்பாணம்,
4—11—52.

# சோமவாரவிரதம்

## விரதங்களுள்ளே உத்தமமானது

உத்தம தேவர்களுள்ளே உத்தமர் சிவபெருமான; உத்தம சத்திகளுலளே உத்தமி சிவ சத்தி; உத்தம விரதங்களுள்ளே உத்தமம் சோமவாரம் என்று உத்தமமாகிய வேதமுதலிய நூல்களெல்லாம் சொல்லும். இத்துணைப் பெருஞ் சிறப்பினதாகிய சோமவார விரதத்தை மெருமந்தரம் காசி முதலிய தலங்களில் இருந்து நோற்றலால் வரும் பயனினும் மதுரையிலிருந்து நோற்றலால் வரும் பயன் கோடிமடங்கு அதிகமாகும். சிவபெருமான் உமையோடு கூடுதலாற் சோமரெனப் பெயர் பெறுவர். இது பற்றியே மதுரையிலிருந்து நோற்றல் விசேடமெனப்பட்டது. இன்னும் அமாவாசியோடு கூடிய சோமவாரம் (சோம வாரத்திலே உதயம் தொடங்கி இரவிலே கடையாமம் வரையும் அமாவாசி இருப்பின், அது மூன்றுகோடி சிவராத்திரியோடொக்கும். கடையாமத்தின் அரைநாழிகை இருப்பினும் நன்று.) மிக விசேடமாம். பாவத்துக்கு அஞ்சி நீதிவழியே ஈட்டிய பொருள் கொண்டு நோற்கும் இவ்விரதப் பேறு ஒன்று அநந்தமாய் வளரும்

இத்துணை மகிமை பொருந்திய அமாவாசியோடு கூடிய சோமவாரம் வருகிற கார்த்திகை மாசம் (17—11—52) உடநிகழுகின்றது.

—

இப் புண்ணிய தினத்தில் திருக்கேதீச்சரத்திலும் வண்ணார்பண்ணை வைத்தீசுவரன் கோவிலிலும் விசேட அபிடேக ஆராதனைகள் நடைபெறுமென ... கின்றூர்.

நீங்கள் இளமைப் பருவத்தை யடைய
சி. எம். சாமி




உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

### குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S. I
(கியாட்லாக் இனும்)

M. 16, 25-4-52—25-10-52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் தன்மையும் கல்வி முறையும்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

பிழைபடச் செய்து மறைப்பது முடியாது. கைத்தொழிற்சாலைப் பயிற்சியினால் (Manual training exercises) மாணவர்கள் வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டு, தீவினைகளை அஞ்சுபவர்களாயும் தன்னடக்கமுடையவர்களாயும் நல்வற்றில் மனமகிழ்ச்சியுடன் காலங் கழிப்பார்கள். மேன்மேலும் இப் பயிற்சி பெருகுவதாக,

## மாணவர்க்கு ஊக்கம் அளித்தல்

செயலின்றி அறிவில்லை. வெளியீடின்றிப் பதிவில்லை என்றும். மாணவர்கள் ஒன்றைச் செய்து முடித்தவுடன் ஆசிரியரின் நன் மதிப்பைப் பெற விரும்புகின்றனர் இது மானிட இயற்கை. பாட்டுக்குக் கைதட்டித் தலையாட்டினால் பாடகர் மேலும் இனிமையாகப் பாடுகின்றனர். ஆகவே மாணவர்கள் ஒன்றை நன்றாய்ச் செய்தால் அவர்களுக்கு நற்குறிகள் அளித்தல் வேண்டும். அவ்வாறு அளித்தால மேன்மேலும் முயன்று படிப்பார்கள்.

உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் மனிதனைச் செயலுக்குத் தூண்டுகின்றன. எச் செயலைச் செய்வதென்று துணிய மனதும் செய்கையிற் பழகச் கல்வியும் அமைந்திருக்கின்றன. வேலைக்குத் தகுந்த செயல் நடத்தவே வீட்டிலும் பள்ளிக்கூடங்களிலும் தொழிற்சாலைகளிலும் கற்கின்றோம்,

இயற்கையில் எல்லாவுயிர்களும் முயற்சியுடன் கூடியிருக்கின்றன. செடிகொடிகளின் வேர்கள் பூமியிழுப்பதால் கீழ்நோக்கிச் செல்கின்றன. வேட்கையால் நீர்நிலையை நோக்கிச் செல்கின்றன. வெயிலுக்கு அஞ்சி ஒளியினின்றும் ஒளிக்கின்றன. புழுக்கள் ஒளியை நோக்கி நெளிகின்றன. பளபளப்பான வெளிச்சம் உயிரினங்களின் கண்ணில் வீழ்ந்தால் கருவிழி சுருங்குகின்றது. உள்ளங் காலில் இறகால் தடவினால் திடீரெனக் கால் இழுபடுகிறது. குளவிகள் கீரைப் புழுவைக் கொட்டி மயங்கச் செய்து அதன் முதுகில் முட்டையிட்டுக் களிமண்ணால் மூடிவிடுகின்றன. ஆகவே முயலுவது எல்லாவுயிர்களுக்கும் இயல்பே. அறிவு பெருகப்பெருக இயற்கை முயற்சி அறிவால் மாற்றப்படுகிறது.

## இயற்கையுஞ் செயற்கையும்

இயற்கை முயற்சியையொட்டியோ வெட்டியோ செயற்கை முயற்சி ஏற்படுகிறது. ஒருவர் நாயொன்று வளர்த்தார். ஒவ்வொரு நாளும் அதற்குச் சோறிடுவதற்கு முன் சிறிதுநேரம் மணியடித்துப் பின் சோறிட்டு வந்தார். அப்பழக்கத்தால் மணியோசை கேட்டவுடன் அந்நாய்க்கு உமிழ்நீர் ஊறிவிடும். சோற்றைக் கண்டவுடன் வாயில் நீர் ஊறுவது இயற்கை. மணியோசையால் பழக்கியது இயற்கையையொட்டிய செயற்கை. ஓர் ஊரில் ஒரு சிறுவன் இருந்தான். தனக்கு வேண்டிய பொருள் யாதேனும் பிறர் கையிலிருந்தல் அதனை வெடுக்கெனப் பிடுங்கிக் கொள்வான். நல்லாசிரியர் ஒருவர் அவனிடம் வந்தார். தன் கையிலுள்ள கிலுகிலுப்பையை அவனுக்குக் காட்டினார். அதனை அவன் பிடுங்கிக் கொண்டான்: உடனே செவிட்டில் பளீரென்று அறைந்தார். ஆட்டக் கருவியைக் கீழே வீசியெறிந்துவிட்டு அழவாரம்பித்தான். "இனி ஒன்றையும் பிறர் கையிலிருந்து பிடுங்காதே; மாமா! தயவுசெய்து தாருங்கள் என்று கேள்; இதோபார் கற்கண்டு! நான் சொன்னபடி கேட்டு வாங்கிக்கொள்" என்றார். சிறுவனும் அவ்வாறே செய்து மகிழ்ச்சியடைந்தான். இஃது ஒன்றை வெட்டியுண்டாக்கும் செயற்கை முயற்சி

இயற்கைக் குணத்தை ஒட்டியோ வெட்டியோதான் செயற்கைக்குணம் ஏற்படும். இயற்கையையறிந்து நற்பழக்கம் உண்டாக்குவதே ஆசிரியரின் கடமையாகும். இனி சில இயற்கைக் குணங்களை ஆராய்வாம்.

## இயற்கைக் குணங்கள்

முதன்முதலில் அச்சம்; இருளைக் கண்டும் புதிய பொருளைக் கண்டும் அஞ்சுவது யாவர்க்கும் இயல்பு அஞ்சாத நெஞ்சம் வீரர்களுக்கு வேண்டப்படும். "அஞ்சு வதஞ்ச லறிவார் தொழில்" தண்டனைக்கு அஞ்சி மாணவர்கள் பாடங்களைப் புறக்கணியாமற் போற்றுவார்கள் என்ற விடயத்தை யாவரும் நன்கறிவார்கள்.

அடுத்தபடி அன்பு: நாம் எவரை நேசிக்கிறோமோ அவரை மகிழ்விக்க விரும்புகிறோம் ஆதலால் மாணவர்களின் நேசத்தைப் பெற்றுவிடின் அவர்களுடைய உழைப்பை எளிதில் பெறலாம்.

மூன்றாவதாகப் பொருள்களை நன்கறிய வேண்டுமென்ற அவா: புதிய பொருள்கள், பளபளப்பான பொருள்கள், ஒலிக்கின்ற பொருள்கள், அசைகின்ற பொருள்கள் ஆகியவைகள் எக்காலத்திலும் சிறுவர்களுடைய கவனத்தை இழுக்கின்றன, படக்காட்சி (Cinema) மிருகக்காட்சி Circu:) நாடகம், கூத்து, பாட்டுக்கச்சேரி, சாலவேடிக்கை, தேக்கச்சேரி, தேர், திருவிழா, இவற்றிற்கு ஒருநாளும் கூட்டம் குறையாது. இவ்வவாவினாலுன் சாத்திரங்கள் எழுதப்பட்டன. இவ்வவா சிறுவர்களிடத்தில் மிகுந்திருக்கும். வயது ஆகவாகக் குறையும். முப்பது வயதுக்கு மேல் பெரும்பாலும் தன் சூழ்நிலையன்றிப் பிறவற்றிற் பற்று ஏற்படுவது அருமை. சிறுவயதில் பொருட்பாடங்களும் கைத்தொழில்களும் கற்பிக்கப்படல் வேண்டும். பதினாறு வயதுக்குமேல் காரணகாரிய ஆராய்ச்சி ஏற்படும். அப்பொழுது சாத்திரப் பயிற்சி உண்டாக்குதல் வேண்டும். இளமையிற்கல என்றது இவ்வுண்மையைப் பின்பற்றியன்றோ?

பிறரைப் பார்த்துச் செய்தல் என்ற குணமும் பொதுவானதே. 'தார்தே' என்ற பரங்கி ஆசிரியர் இதனை விரித்துரைத் திருக்கின்றனர். அடுத்த வீட்டுக்காரர்களும் எதிர் வீட்டுக்காரர்களும் எதைச் செய்கின்றனரோ, அதனையே நாமும் செய்ய விரும்புகின்றோம். நம்மை அறியாமலே செய்கின்றோம். பாஷை கலை நிலையங்கள் சாத்திரங்கள் யாவும் இக்குணத்தால் வளர்கின்றன. மன்னன் கொன்னிப் பேசினால் மன்னுயிர்களும் கொன்னிப் பேசுவார்கள். பெரியவர்கள் நாட்டுடை கட்டினால் யாவரும் நாட்டுடையே கட்டுவார்கள். பாட்டன்மார்கள் பின்பற்றிய கொள்கைகளையே பேரன்மார்களும் பின்பற்றுவார்கள். இதனை இனியும் விரிக்கவேண்டியதில்லை.

பின்பற்றுவது என்பது ஒன்றுக்குப் பத்தாய்ச் செய்தல் என்ற போட்டிக் குணமாக மாறுகிறது. ஒருவன் பத்து ரூபாய் தானஞ் செய்தால் மற்றவன் நூறு ரூபாய் தானஞ் செய்கிறான். அவனுக்கு நாம் இளைப்பதாவென்ற எண்ணம் நம்மைத் தூண்டி முயலச் செய்கிறது. அக்கம்பக்கத்தார் அடைகின்ற பேற்றை நாமும் அடைய விரும்புகின்றோம் பலர்கூடிக் கற்பதால் மாணவர்கள் போட்டியுடன் நன்கு கற்கின்றனர். ஆசானமார்கள் நல்ல வழிகாட்டிகளாயிருத்தல் வேண்டும் குருமார்களையும் தலைமாணாக்கர்களையும் பின்பற்றியே பள்ளிக்கூடம் முழுதும் நடக்கின்றது தலையாட்டாயவை வாலாட்டாது போட்டியின்றிச் செம்மையான வாழ்க்கை ஏற்படாது. பிறருடன் போட்டி போடாவிடினும் தன்னுடனாவது போட்டி வேண்டும். சென்ற வருஷம் இம்மட்டுமறிந்து இந்நிலையினின்றேன்; இவ்வருஷம் அறிவிலும் நிலையிலும் உயர்வேன்; என்று தன்னைத்தானே கடந்து உயர்தல் வேண்டும் ஆயிரங் கூறினும் பிறருடன் போட்டி யென்பது அழியாது. பள்ளிக்கூடங்களில், நற்குறிகள், பரிசுகள் முதலியவற்றால் இப் போட்டியை ஒழுங்குபடுத்திவிடலாம். பந்தய வோட்டங்களாலும் ஆட்டங்களாலும் இப் போட்டியுணர்ச்சி திருத்தமடைகின்றது.

## செயலைத் தூண்டுங் குணங்கள்

முன்னேற விரும்புதல், தன்னை மதித்தல், தடைகளைக் கடத்தல் ஆகிய குணங்களும் நம்மைச் செயலுக்குத் தூண்டுகின்றன. இலக்கணப் பாடத்தைக் கண்டஞ்சுவது வெட்கத்தை விளைவிப்பதாம் என்று மாணவர்கள் கருதினால் அதனைப் படியாமல் விடுவரா? உரோசத்துடன் ஒன்றைச் செய்வதாலன்றோ குணம் வளர்கின்றது?

அடுத்தபடியாக உடைமை: இரண்டாவது வயதிலேயே எனது எனக்கு என்ற சொற்கள் கற்கப்படுகின்றன. இரட்டைக் குழந்தைகளுக்குத் தனித்தனிப் பொம்மை வாங்கித் தராவிடில் வீடு அமர்க்களந்தான். ஆண்டிகளுக்கும் தண்டுகமண்டலம் வேண்டியிருக்கின்றது.

சிறுவர்களைத் தமது உடைமைகளை ஒழுங்காகச் சேமித்து வைக்கப் பழக்குதல்வேண்டும். பொருள்களை யீட்டுதலென்பது சிறந்ததோர் பழக்கமாம். தொடர்ச்சியாகவுள்ளவற்றிற் சில குறைந்தால் அவற்றைத் தேடிச் சேர்க்க எவ்வளவு முயலுகின்றோம்? இதனாலன்றோ நிகண்டு அகராதி அபிதானகோசம் முதலிய நூல்கள் எழுதப்படுகின்றன. ஆயிரஞ் சேர்ப்பேன், இலட்சஞ் சேர்ப்பேன் என்ற துணிபெல்லாம் இவ்வுணர்ச்சியாற்றான். நூல்கள் சேர்த்து நிலைக்கச் செய்வது சிறந்த செயலாகும். ஒழுங்கு, முறை, முதலியன கற்கப்படுகின்றன; அறிவும் வளர்கின்றது. பொருளீட்டலென்பது இயற்கைப் பொருட்பாடங்கட்கு இன்றியமையாததாம்.

(செந்தமிழ்)

## கற்றவர்க்கழகு

## கசடற மொழிதல்

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponne, Jaffna on Friday November 14 1952.

சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்
சுசீலாவின் காதல்
யாழ். நகர மண்டபத்தில்
ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்
1952-ம் ஆ
மார்கழி மீ 6-உ சனிக்கிழமை
சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக
மிக விமரிசையாக நடத்தப்படும்

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்
திறமான குணிமார்க்ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிறோட், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
தங்கமாளிகை
நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப் பெரிய
நகை
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org